1987 மே 6]

பாக்கிக்கு 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்ற வகையில் இருக்கிறது. இது 'உசூரியஸ் லோன் ஆக்ட்'படி தவறு என்பதை பல விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): அதைப்போல விவசாயிகள் கட்ட வேண்டிய மின் கட்டணம் என்றாலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கடன் என்றாலும் அவைகளுக்கு இந்த உசூரியஸ் லோன் ஆக்ட் அப்ளை ஆகும். 4 சதவீதம் முதல் 6 சதவீதத்திற்குமேல் அவைகளுக்கு வட்டி வாங்கக்கூடாது என்று கர்நாடக உயர்நீதி மன்றமும், ஆந்திரா உயர்நீதிமன்றமும், வேறு பல நீதி மன்றங்களும் சொல்லியிருக்கின்றன. பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறது. அரசாங்கம் மின் கட்டண பாக்கிக்காக இந்த 24 சதவீதம் வட்டி அல்லது அபராதம் என்று இருப்பதை கருணையுடன் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே இதுபற்றி மின்துறை ஆய்வு செய்ய, மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்படும்.

குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை அமைத்தல்.

626. (*வினா எண். 13887)—திரு. கோ. பெருமாள் பிள்ளை, டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச .பாலகிருஷ்ணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி முனையில் திருவள்ளுவர் சிலை வைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகாமையில் இருக்கும் ஒரு சிறிய பாறையின் மீது ரூ. 432 இலட்சம் செலவில் செப்புத் தகட்டினால் ஆன திருவள்ளுவர் சிலை ஒன்றினை நிறுவ அரசு

முடிவெடுத்தது. கட்டுமான பணி மற்றும் சிலை அமைப்பது ஓர் தனி இனமாக இருப்பதால் நல்ல அனுபவம் உள்ளவர்களிட மிருந்து விண்ணப்பங்களைப் பெற்று, தகுதியுடையவர்களின் பட்டியல் தயார் செய்ய செய்தித் தாளில் விளம்பரம் செய்யப் பட்டது. அதன் தொடர்பாக இப்பணிகளைச் செய்ய சில நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று, விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. பெருமாள் பிள்ளை : தலைவரவர்களே, திருவள்ளுவர் சிலை அமைப்பதற்கான பணி விரைவாக நடைபெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள் ; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வருகின்ற பயணிகள் கண்டுகளிக்கின்ற வகையில் திருவள்ளுவருக்கும், விவேகானந்தருக்கு சிலை அமைத்து, மண்டபம் கட்டியிருப்பதைப் போல சிலை அமைத்து மண்டபம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மண்டபம் அமைக்கிற கருத்துரு இல்லை. அமெரிக்காவில் சுதந்திர தேவி சிலை இருப்பதைப் போன்று தனியாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருதுகின்றார்கள்.

டாக்டர் அ. பொன்னுசாமி : தலைவரவர்களே, இப்போதெல்லாம் திருவள்ளுவருடைய உருவச் சிலையாக இருந்தாலும், உருவப் படமாக இருந்தாலும் நீண்ட தாடி வைத்து உருவாக்கப் படுகிறது. "மழித்தலும் நீட்டலும் வேண்டா" என்று உலகப் பொதுமறையாகிய தன்னுடைய பொய்யா மொழியில் சொல்லியிருக்கிறார். ஆகவே, அவருடைய கருத்துப்படி அவர் நீண்ட தாடி வைத்திருக்கமாட்டார். மழித்தலும் இல்லாமல், நீட்டலும் இல்லாமல் அதேநேரத்தில் கிரேக்கர் போல் குறுந்தாடி வைத்திருக்கலாம். ஆகவே, திருவள்ளுவர் சிலையை அமைக்கும் போது நீண்ட தாடி இல்லாமல் அழகாகவும், கம்பீரமாகவும் குறுந்தாடியுடன் அமைக்க அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் எப்படி திருவள்ளுவர் சிலை இருக்கவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படுவதுபோல தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் திருவள்ளுவர் சிலையை அமைக்க அரசு முன்வருமா ?

1987 மே 6]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அப்படி ஒரு உத்தேசம் இல்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: தலைவரவர்களே, குமரிமுனை சிறப்பான சுற்றுலா மையம் என்பதால் உலக நாடுகளி லிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தெரிந்து கொள்ளுகின்ற வகையில் திருக்குறளை உலக மொழிகளில் எல்லாம் குறித்து வைகவும், அதைப்போன்று திருவள்ளுவர் பற்றி அறிஞர் பெருமக்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களை எல்லாம் தொகுத்து வைக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா? அவற்றை எல்லாம் அங்கே தொகுத்து வைத்து ஒரு நூல் நிலையமும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். தலைவரவர்களே, அங்கே திருக்குறளை எழுதி வைப்பதற்கான கருத்துக்கள் இருக் கின்றன.

திரு. ஜி. கே. ஜே. பாரதி: தலைநாயகர் அவர்களே, குமரி முனையில் ஒரு அழகான வள்ளுவர் சிலையை அமைக்க விருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைவதோடு அந்த சிலை நின்ற கோலத்தில் வைக்கப்படுகிறதா அல்லது அமர்ந்த கோலத் தில் வைக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், 1330 அருங்குறள்களையும் தொகுத்து ஆராய்ச்சி செய்ய ஒரு ஆராய்ச்சிக் கூடத்தையும் அமைத்து, முனைவர் பட்டத்தைப் பெற விரும்பும் மாணவர்களுக்கு அருமையான ஒரு தூண்டு கோலாக அது அமையும் வகையில் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவரவர்களே சிலை நின்ற திருக்கோலத்தில்தான் இருக்கும். சிலையின் நெஞ்சு வரையில் 'லிஃப்டும்' நெஞ்சுக்குமேல் ஏணியும் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]